# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**

**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |


<u>சுற்றறிக்கை எண்: 12/2018</u> 23-08-2018

அன்புடையீர்,

வணக்கம். வீடு கட்டும் முன் பணம் பெற்றிட குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் 6 ஆண்டுகள் என்பதை 4 ஆண்டுகள் என குறைத்து மின்வாரியம் B.P.No: 23 dt: 18-07-2018 ல் வெளியிட்டுள்ளது.

மருத்துவச் செலவினை திரும்பப் பெறும் திட்டத்தில் 01-12-2015 புதிய ஊதிய உயர்வில் 15% வரை பணம் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கான வாரிய உத்திரவு B.P.No:25 dt: 01-08-2018. வெளியிடப்பட்டுள்ளது.

**எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 35 தொழிலாளர்களுக்கு L.I க்கு சமமான பதவி உயர்வு, பேனல் முடிவடையும் தேதியான 09-08-2018 க்குள் வழங்கிட இயக்குநர்/உற்பத்தி அறிவுறுத்திய பிறகும், E.T.P.S நிர்வாகம் தாமதப்படுத்தியதால், J.M.D அவர்களை 03-08-2018 அன்று பொதுச் செயலாளர் சந்தித்துப் பேசினார். அதனைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 09-08-2018 தேதியிட்டு பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்தத்தில் உறுதி அளிக்கப்பட்ட பிரச்சனைகளில், 1) வேலைபளு ஒப்பந்தப்படி கூடுதல் பொறுப்புகள் அனுமதிப்பது. 2) 156 A.T.O பதவி உயர்வை துரிதப்படுத்துவது. 3) 19 RIS பதவிகளுக்கு அனுமதி. 4) 2000 LI பொறுப்புகளை 174 கோட்டங்களுக்கு சமமாகப் பிரிப்பது. 5) 383 Spl.Gr.FM அனுமதி. 6) புதிய மின்நிலையங்களில் J.E II அனுமதி. 7) 115 T.A அனுமதி ஆகியவற்றை மின்துறை அமைச்சரின் நேரடி கவனத்திற்கு 06-08-2018 அன்று அனைத்து மின்சாரத் தொழிற்சங்கங்கள் கொண்டு சென்றதைத் தொடர்ந்து,

1) வேலைப்பளு ஒப்பந்தப்படி கூடுதல் பொறுப்புகள் அனுமதிக்கப்பட்டு முன் மொழிவுகள் அனுப்பும்படி 06-08-2018 அன்று வட்டங்களுக்கு CE/P அலுவலகத்திலிருந்து கடிதம் எழுதப்பட்டுள்ளது.

2) 19 RIS பதவிகளுக்கான அனுமதி B.P.No:16 dt:18-08-2018ல் வழங்கப்பட்டுள்ளது.

இதர பிரச்சினைகளிலும் விரைவில் தீர்வுகாண சங்கங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

உடல் நலக்குறைவினால் சென்னை காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தலைவர் கலைஞர் அவர்கள் மரணமடைந்தார் என்று 07-08-2018 அன்று மாலை வெளியான செய்தி தமிழ் மக்களின் மனதில் பேரிடியாய் இறங்கியது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய, அடிதட்டு மக்களைப் பாதுகாத்திடும் சிப்பாயாக விளங்கிய தலைவரின் உடல் சென்னை மெரினா கடற்கரையில் பேறிஞர் அண்ணாவின் நினைவிடம் அருகில் 08-08-2018 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடுத்த நாள் 09-08-2018 அன்று, சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தின் முன்பு அலங்கரிக்கப்பட்ட, தலைவர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதில் நமது பொதுச் செயலாளர் பங்கேற்று, சங்கத்தின் அஞ்சலியைச் செலுத்தினார்.

மத்திய சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தலை சுமூகமாக நடத்திட 11-08-2018 அன்று சென்னையில் நடைபெற்ற சங்கத்தின் உயர்மட்டக் குழுவில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி எதிர்வரும் 14-10-2018 அன்று திருச்சியில் மத்திய சங்கப் பொறுப்பாளர் தேர்தல் நடைபெறும். பேருந்து, இரயில் மற்றும் வாகனங்களுக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம். தேர்தல் அறிவிப்புகள் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

வழக்கமான ஆண்டுயர்வுக்கு முந்தைய நாளில் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வு காலப் பலன்கள் அனுமதித்திட, அடுத்தநாள் ஆண்டுயர்வை கணக்கிலெடுக்க வாரியம் ஏற்கனவே 08-06-2018 நாளன்று உத்திரவு வழங்கியுள்ளது. தற்போது பதவி உயர்வு சம்பளம் பொறுத்திடவும், அடுத்த நாள் ஆண்டுயர்வு தேதிக்கு விருப்பம் தெரிவிக்கலாம் என்று அரசாணை 13-08-2018ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்திரவினையும் விரைவில் மின்வாரியத்தில் அமுல்படுத்திட நடவடிக்கை மேற் கொள்வோம்.

16-08-2018 அன்று இந்திய நாட்டின் முன்னாள் பிரதமரும், பி.ஜே.பி.யின் மூத்த தலைவர்களில் ஒருவரும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தங்க நாற்கரச் சாலைக்கு வழி கோலியவருமான திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் காலமானார்.

தனியாருக்கு சாதகமாக மின்கட்டமைப்பில் மாற்றங்கள் செய்திடும், மின்சார திருத்த சட்ட மசோதா 2014, தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட போராட்டங்கள் காரணமாக, மைய அரசால் இந்தியப் பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்த முடியவில்லை. எதிர்ப்பியக்கத்தைத் தொடர்ந்து மேற்கொண்டிட டிசம்பர் 7 வேலை நிறுத்தம் உட்பட சில நடவடிக்கைகளுக்கு தமிழகத்தில் உள்ள தேசிய மின்சாரத் தொழிற்சங்கங்களின் இணைப்புச் சங்கங்களும், இதர சங்கங்களும் 16-08-2018 அன்று கூடி திட்டங்கள் மேற் கொண்டுள்ளன. நமது சங்க ஆதரவையும் தெரிவித்துள்ளோம்.

16-08-2018 அன்று மாலை திரு. வெங்கடேசன், Supdt, CE/P. Office அவர்களின் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் மற்றும் நிதிச் செயலாளர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

17-08-2018 அன்று மாலை சென்னை வடக்கு மண்டலச் செயலாளர் திரு.M.சூசைராஜ் அவர்களின் மகள் திருமணம், பெங்களூர் “புனித பேட்ரிக் தேவாலயத்தில்” விமரிசையாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து I.T.C. 5 Star Hotel லில் இரவு பிரமாண்ட விருந்தும் வழங்கப்பட்டது. சென்னை மைய வட்டத்திலிருந்து கணிசமாக, நமது சங்க பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும், அதிகாரிகளும், இதர சங்கப் பொறுப்பாளர்களும் வந்திருந்து திருமணம் மற்றும் விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். நமது சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர், உதவிப் பொதுச் செயலாளர், சட்டத்துறை செயலாளர் திரு.G. விஸ்வநாதன், செய்தி மடல் துணை ஆசிரியர் திரு.M.R. பால்ராஜ், தலைமையக வட்டச் செயலாளர் திரு.S.V.S ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

கடும் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான கேரள மக்களுக்கு நிவாரணம் வழங்கிட மின்சாரத் தொழிலாளர்கள் ஒரு நாள் சம்பளத்தினை பிடித்தம் செய்து கொள்ள அனைத்து மின்சாரத் தொழிற்சங்கங்களும் 23-08-2018 அன்று வாரியத் தலைவரை நேரில் சந்தித்து கடிதம் கொடுத்துள்ளோம். 01-09-2018 சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும்.

இளநிலை உதவியாளர் கல்வித் தகுதி மாற்றத்தினை எதிர்த்து நமது சங்கம் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த ரிட் அப்பீல் இன்னமும் விசாரணைக்கு வரவில்லை. அதனை விரைவுபடுத்திட நமது வழக்கறிஞர்களை கேட்டுக் கொண்டுள்ளோம். இளநிலை உதவியாளர் (கணக்கு) 250 நபர்களுக்கு நேரடி நியமனத்திற்குண்டான பணிகள் துவங்குவதற்கு முன் உள்முகத் தேர்வினை முடித்திடுமாறு மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

தோழமையுள்ள

இ.சந்திசேகரன்

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள்,
வட்டச் செயலாளர்கள், வட்டத் தலைவர்கள் மற்றும் கோட்டச் செயலாளர்கள்.

நகல் : செய்தி மடல்.